# In Loving Memory of

## Late Mrs Manjula Benadictchandran



Sunrise: 24.10.1970 Sunset: 16.01.2018

18.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையில்லா உலகு

நிலையில்லா உலகு நிஜமில்லா உறவு
நிலையானதொன்றும் இங்கில்லை
நேற்றும் இன்றும் என்றும் மாறாத தெய்வம்
நீ மட்டும் போதும் எப்போதும்
நீ மட்டும் போதும் நீ மட்டும் போதும்
நீ மட்டும் போதும் எப்போதும் - 2

ஆசையிலே பிறந்து ஆணவத்தில் தொடர்ந்து
ஆடி இங்கு அடங்குது வாழ்க்கை
வாழ்வு தரும் வார்த்தை வாழ்க்கைதனை வளர்த்தால்
வசந்தம் வந்து நம்மில் என்றும் தங்கும் - 2
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் - 2
நீ மட்டும் போதும் எப்போதும்

பொய்மையிலே விழுந்து போலியாக நடந்து
பொழுதிங்கு போகுது கழிந்து
உண்மைதனை உணர்ந்து உறுதியுடன் எழுந்தால்
ஊதியங்கள் தேவையில்லை நமக்கு - 2
நீ மட்டும் போதும் என் வாழ்வு மாறும் - 2
நீ மட்டும் போதும் எப்போதும்

## என் இதயத்தின் காயத்தை

என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசு ஐயா
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா
யோவானைப் போல் உம்மார்பிலே
இளைப்பாற வேண்டுமையா
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா
பெலவீனனான என்னையும்
உம்பெலத்தால் இடைகட்டுவீர்
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா
காணாமல் போன ஆடு நான்
அன்போடு தேடினீரே
கரைகாணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கை ஐயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி மஞ்சுளா பௌடிற்சந்திரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் நற்குணமும் நல்லடக்கமும் கொண்ட அமரர் துரைசிங்கம் (கல்வி நிர்வாக உத்தியோகத்தர்) தவமணி பெற்றெடுத்த நல் முத்துக்களில் இளைய மகளாக வநதுதித்தவர் மஞ்சுளா. இவரது உடன்பிறப்புக்கள் இந்திரவசந்தி, ராஜ்மோகன், சசிரேகா, ஆனந்தி ஆகியோராவார்.

இவர் தனது இளமைக்கல்வியை யாழ் ஆனந்தா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். பின் திருக்குடும்பக் கன்னியர்மடத்திலும் தொடர்ந்து வேம்படி மகளிர் கல்லூரியிலும் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் உதவுவதிலும், உணவு பரிமாறி உபசரிப்பதிலும் அன்பாகப் பழகுவதிலும் தன் பண்பாகக் கொண்டார். இப்படியாக வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் யாழ் நல்லூரை வதிவிடமாக் கொண்டிருந்த திரு தேவராசா(மின் அத்தியட்சகர்) அமரர் திருமதி சந்திரா தம்பதியினரின் மூத்த மகனான பௌடிற்சந்திரன் என்பவரைக் காதலித்து கரம்பிடித்து மணம்புரிந்து கொண்டார்.

இவரின் மைத்துனிமாரான ரஞ்சினி, மேரிமல்லிகா, டொறிற்றாவும் மைத்துனனான தேவச்சந்திரனையும் தமதாக்கிக் கொண்டார். தம்பதிகள் இருவரும் இல்வாழ்வின் இன்பமுடன் திளைத்திருத்த வேளையில் இல்வாழ்வின் நற்பயனாய் கிறிஸ்ரின் சோபனா, பிறைண்டன் கௌத், ஜொய்லின் கல்ப்பனா ஆகிய மூன்று முத்துக்களைப் பெற்றெடுத்தனர்.

இப்படியாக இவர்கள் யாழ்ப்பாணத்தில் சந்தோசமாக வாழ்ந்துவரும் வேளையில் இவரது கணவன் பிரித்தானியாவிற்கு தொழில் நிமித்தம் சென்று வாழ்ந்தார். பின்பு இவரும் இவரது மூன்று பிள்ளைகளுமாக தாயகத்தை விட்டு கடல் கடந்து தமது கணவரிடம் பிரித்தானியாவிற்கு 1997 இல் குடிபெயர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவர் ஆரம்பித்து வைத்த பிறைன்டன் வீடியோ விஷன் ஸ்தாபனத்தில் தன் கணவருக்கு ஒத்தாசையாக மிகச்சிறப்பாக பணிபுரிந்தார். தனது வாடிக்கையாளரிடமும் நண்பர்களிடமும் மிகவும் அன்பாகப்பழகி எல்லோருடைய மனதையும் கவர்ந்தவராகத் திகழ்ந்தார். தேவாலயத்திலும் தன் பங்கிற்கான கடமைகளையும் திறம்படச்செய்து தேவவிசுவாசத்திலும் நம்பிக்கையிலும் திகழ்ந்து விளங்கினார். அங்கும் அருட்தந்தை, அருட்சகோதரி, பங்கு மக்கள் மனங்களிலும் நிரந்தர இடம் பிடித்தார்.

இங்கு சந்தோசமாக வாழ்ந்து வருகையில் மக்கள் மூவருக்கும் கல்விச்செல்வத்தைத் தேடிக்கொடுத்து அவர்களை நல்ல முறையில் வாழ வைத்தார். திருமணப்பருவத்தை எய்தியதும் மூத்த மகளான சோபனாவுக்கு நகுலேந்திரனையும், பிறைன்டனுக்கு டெனிஷியாவையும், கல்ப்பனாவுக்கு கஜேந்திரனையும் மணமுடித்து வைத்துக் குடும்ப உறுப்பினராக்கிக் கொண்டார். இவர்களுக்கு கிஷோனா, சஷானா, டெறிக்காமஞ்சுளா ஆகிய பேரக்குஞ்சுகள் பிறந்து இவர்களது மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மேம்படுத்திக் கொடுத்தனர்.

பிரித்தானியாவில் காலடி எடுத்து வைத்து 21 வருட காலமாக கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் என்று இனிய இல்லற வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. இறுதியில் 2012 இல் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு 5 வருடங்களாக உபாதைப்பட்டு கடைசியில் 16.01.2018இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் அத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக. ஆமேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நெகிழ்த்திய மறைவு

மஞ்சு பெனடிற்சந்திரன் அவர்களின் மறைவு நம் அனைவரின் நெஞ்சங்களிலும், துக்கத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பெற்றோர் மறைவினைக் கண்டிருக்கின்றோம். ஆனால் நம்மில் ஒருவரை, நம் தலைமுறையில் நாம் கண்டு பழகிய ஒருவரை இழக்கின்றபோது நம் சோகம் உண்டாக்கும் வலி ஆழமானதுதான்.

'மஞ்சுவின்' கணவர் பெனடிற், பிள்ளைகள் சோபனா, பிறைன்டன், கல்ப்பனா மற்றும் மருமக்கள் அனைவருக்கும் குடும்ப உறவுகளுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தை வாஞ்சையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
மஞ்சுவில் நான் கண்ட மூன்று முக்கிய புண்ணியங்களை இங்கு பகிர்ந்து கொள்கின்றேன்.

'புதிய வானகமும், புதிய பூமியும்'' அவருக்குள் உதயமாக உயிர்த்த இயேசுவிடம் நாம் அவரது ஆன்மாவைக் கையளித்து ஜெபிப்போம்

#### நிலையான புன்னகை

இவரின் முகம் எமக்கு எப்போதும் ஞாபகப்படுத்துவது சிரித்த அழகான உதடுகளையே. அவர் தனது மகிழ்ச்சியின் காலங்களில் மட்டுமல்ல தனக்கு இவ்வாறு நோய் தொற்றிக் கொண்டது தெரிந்து தன் மனதின் ஆழத்தில் வேதனைப்பட்டாலும் தன்னைச் சுற்றியிருக்கும் கணவன், பிள்ளைகள், குடும்ப உறவுகளுக்கு தான் மகிழ்ச்சியாக இருப்பதையே (2012 January – தொடங்கி 2018 January முடிய) காட்டிக் கொண்டார். முகம் மலர்ந்து சிரித்து தன்னைச் சுற்றியிருப்போரை மகிழ்வதாக வாழவைத்த மலர்தான் மஞ்சுளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருந்தோம்பல்**

தன்னிடம் வருவோர்க்கெல்லாம் விருந்தோம்பி மகிழ்ந்தார் மஞ்சுளா. சுகநலத்துடன் வாழ்ந்த காலங்களில் எவ்வாறு வீட்டுக்கு வருவோர்க்கெல்லாம் விருந்தோம்பி மகிழ்ந்தாளோ அதைவிட ஒருபடி மேலாகவே நோய்வாய்ப்பட்டிருக்கும் பொழுது தம் வீடு நோக்கி வருபவர்களை விருந்தோம்பி மகிழ்வுடன் புன்னகை பூத்து இருகரம் பற்றி நன்றி கூறி அனுப்பி வைத்தார். நன்றி என்று கூறும் நேரம் எல்லாம் கண்களால் எதையோ சொல்ல விளைந்தார். ஆனால் அதைப் புரிந்து கொள்ள எம்மால் இயலவில்லை.

**நீடிய பொறுமை, ஆழமான விசுவாசம்**

இவர் தனது கணவர், பிள்ளைகள், தான் வாழ வந்த குடும்ப உறவுகளுடன் எப்போதும் அன்புடனும் கனிவுடனும் நன்நடத்தையுடனும் வாழ்ந்தார். எவ்வளவு பெரிய துன்பங்கள் வந்தபோதும் நீடிய பொறுமையுடன் தனது கடமைகளை நிறைவேற்றி கடவுளில் ஆழமான விசுவாசம் கொண்டவராக வாழ்ந்து பரலோகம் சென்றுள்ளார்.

**அருட்தந்தை பிரிட்டோ பலவேந்திரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவமடைந்த
# திருமதி மஞ்சுளா பௌடிற்சந்திரன்

இறைவன் அளித்த வாழ்வெனும் அருங்கொடையை வாழவேண்டியபடி வாழ்ந்த அன்புநிறை ஜீவன்.

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம்
இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்
வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே
உரியவர்களாய் இருக்கின்றோம்" (உரோமர் 14:5) என்ற

புனித பவுல் உரோமருக்கெழுதிய வார்த்தைகள் மஞ்சுவின் வாழ்வில் உண்மையானவை. நீண்டகால நோயில் அவள் காட்டிய பொறுமை, நம்பிக்கை இதற்குச் சான்று. நிலையற்ற வாழ்வில் நிலையான வாழ்வுக்காய் நன்மையைச் சம்பாதித்தவள் மஞ்சு. அவள் ஒரு செபத்தின் பெண்மணி. யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும், இலண்டன் வோல்தம்ஸ்ரோவை வசிப்பிடமாகவும் கொண்டு தன் சொந்தக் குடும்பத்தினால் மட்டுமல்ல, உடன்பிறப்புக்கள், உறவுகளாலும் கண்ணெனப் போற்றப்பட்டவள் மஞ்சு. புலம்பெயர் நம் மக்கள் பலரால் அன்புடை, பண்புடை, மாண்புடை பெண்ணென மதிக்கப்பட்டவள் மஞ்சு.

தன் கல்வியை யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்றவர். கல்வியால் மேம்பட்ட குடும்பத்தில் உதித்த கடைக்குட்டி, ஆனால் காதல் எனும் கொடியில் சிக்கியதில் கல்வியை இடைமுறித்தவள் மஞ்சு. எனது உற்ற நண்பி திருமதி தேவமலர் சிவகுணத்தின் மருமகன் மனைவி சிங்வேட் கிறீஸ்து அரசர் ஆலய தமிழ்க்குழுமப் பக்தர்களுள் தவறாமல் பங்குகொள்ளும் பக்திநிறை கிறீஸ்தவப்பெண்.

பிள்ளைகளின் கிறீஸ்தவக் கடமைகளைக் கரிசனையுடன் கவனித்து, நிறைசெய்த அன்னை. நம் இன்றைய பரிசுத்த தந்தை பிரான்சிஸ் எம் வாழ்வில் கேட்டு நிற்கும் மகிழ்வு – என்றும் எம் மஞ்சுவில், எவரும் கண்டு களித்தவை. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற முதுமொழி இவளுக்கு நன்கு பொருந்தும். என்றும் இதழில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை. "இதயத்தின் சம்பூரணத்தால் வாய்பேசும்" என்பதை இவளது மனிதநேயமும், இதமான உரையாடலும் வெளிக்காட்டின.

இன்முக வரவேற்பும், வந்தவர்களை உபசரித்து வழியனுப்புவதில் மஞ்சுவின் அன்பும், பண்பும், சகோதர பாசமும் அவள்பால் பல உள்ளங்களை ஈர்த்ததை அவள் இறுதியாத்திரையில் பங்கு கொண்ட சனத்திரள் சான்று பகிர்ந்தது.

"நல்ல மனைவியே ஒருவனுக்குக் கிடைக்கும் நல்ல சொத்து, அமைதியான மனைவி ஆண்டவர் அளித்த கொடை" (சீராக் 26:3-4) என்ற சீராக் நன்மதி பெனடிற்சந்திரன் எவ்வளவு கொடுத்து வைத்தவர் என்பதை நிச்சயமாக்குகின்றது.

தாயின் அன்பில் வளர்த்த முக்கனிகளான பிள்ளைகள் ஷோபனா, பிறைன்டன், கல்பனா, தம் அன்பைப் பொழிந்து தாய்க்காற்றிய பணிகளை மஞ்சுவைத் தரிசித்தவர்கள் கண்டு பிரமித்தனர். இது என் இதயத்தையும் தொட்டது. "மம்மி, மம்மி என்று குழைந்து பேசி, அருகிருந்து உணவூட்டி, அவள் தேவைகளைக் கவனித்தமுறை அனைவரையும் பிரமிக்க வைத்தது. ஏன் அவளின் மைத்துனிமார் குடும்பத்துடன் தினமும் சந்தித்து அவளைக் கவனித்தவிதம் குடும்ப உறவை வெளிக்காட்டியது.

மஞ்சு – தன் இறப்பின் முன் மூன்று முத்துக்களை பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தாள். வளர்த்தாள். அவளது மருமக்கள் பாசம் அவர்கள் கண்ணீரில் வெளியானது. தன் வியாதியைச் செபமாலையுடனும், தொலைக்காட்சிப் பலிவிருந்து பாடல்களுடனும் வென்றெடுத்து, இறுதிவரை இறைநம்பிக்கையுடன் தன் வாழ்வை இறைவனில் இறுதியாக்கிய ஒரு வீரப் பெண்.

இறைவன் அளித்த கொடையான வாழ்வின் கனிகளால் தொடப்பட்டு அவளை நன்கறிந்ததில் மகிழ்வும் பெருமையும் அடைகின்றேன். அவள் ஆன்மீக வாழ்வுக்கும், நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்தவக் குடும்பத்தை உருவாக்கியமைக்கும், இறை இயேசுவின் மதிப்பீடுகளான அன்பு, மகிழ்வு, பரிவு, பகிர்வு, மதிப்பை மணம் கமழ வாழ்ந்து – அனைவருக்கும் சாட்சியாக வாழ்ந்தமைக்கும் வாழ்வின் ஊற்றான இறைவனுக்கு நன்றி கூறி அவளது ஆன்மா ஆண்டவர் சந்நிதியில் அமைதியைச் சுவைத்த குடும்பத்துக்கு ஆறுதல் அளித்து தான் வாழ்ந்த வாழ்வை அவர்களும் தொடர இறையருளை வேண்டுகின்றேன்.

நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா – நீர்
இவர் பரிசாய் இருந்தருளும்

Sr. Sophia (தி.கு.க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான தாய் நீ மம்மி

அன்பின் பிரிவால் வாடுகின்றேன் நான் மம்மி

பத்து மாதம் சுமந்தாய் நீ மம்மி
பத்திரமாய் முப்பது வருடம்
எனை வளர்த்தாய் நீ மம்மி

நல்லதொரு மாமியாராய் நீ இருந்தாய் மம்மி
தாய் இழந்த கணவனின் தாயாய் மாறினாயே நீ மம்மி

உன் பதினேழு வயதில் எனை நீ சுமந்தாயே மம்மி
என் முப்பது வயதில் உனை ஏன் சுமக்க வைத்தாய் நீ மம்மி
இந்த கொடிய நோய் வந்தது 2012இல் உன் மார்பில்
புற்றுநோய் 2015இல் மறுபடியும் ஏன் வந்தது
மருத்துவமனை சென்ற காலத்தை நினைக்கின்றேன் மம்மி
அந்த வருடம் வாழ்ந்த வாழ்க்கையை மறக்க
முடியவில்லையே மம்மி

வந்தவர்களை உபசரிக்க சொன்ன வள்ளலல்லவோ நீ மம்மி
இப்போ நான் உபசரிக்கிறேன் நீ எங்கே மம்மி
காலத்தின் விதியா நீ என்னை விட்டு பிரிந்தாய் மம்மி
கடவுளின் சித்தமோ நீ என்னை விட்டு பிரிந்தது மம்மி

தம்பி தங்கையின் பிள்ளைகளை பார்த்த உனக்கு மம்மி
ஏன் என் பிள்ளையை பார்ப்பதற்கு முன் அவசரப்பட்டாய் மம்மி
மீண்டும் உன்னை காண ஆசை மம்மி
மண் உலகில், அல்லது விண் உலகில்
உன்னை பார்ப்பேன் என்ற நம்பிக்கையயுடன் மம்மி

அன்புடன் உன் மூத்தமகள்
**ஷோபனா பௌழற் பாலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் பிறப்பாயோ என் வயிற்றில்

சுமைகள் பல இருந்தும்
சுமை என்று என்னை நினைக்காமல் சுமந்தவளே
எல்லோர் வாழ்விலும் மரணமே
எல்லையாக இருந்தும்
மரணத்தின் எல்லை தாண்டி
என்னை பெற்றவளே
நீ அன்பாய் கொடுத்த முதல் முத்தம்
இன்றும் என்றும் ஏங்குமம்மா
நான் மீதம் வைத்த உணவை
எச்சில் பாராமல் உண்டாயம்மா
நான் உறங்க தங்க தொட்டில் இருந்தும்
உன் புடவையில் கட்டிய தூளிபோல் ஆகுமா
நீ பாடும் தாலாட்டை நினைத்து சந்திரனும் உறங்க
போனதாய் நினைத்தேன் அமாவாசையில்
நான் செய்த தவறுக்கு அடித்தாய்,
வலி கண்டது நான் அழுதது நீதானம்மா
வானில் இருந்து விழும் மழைத்துளி என்னை தழுவமுன்
சட்டென்று உன் முந்தானை குடையாக உயர்ந்தது
நான் பிறக்கும் வரை என்னை வயிற்றில் சுமந்தாய்
நடக்கும் வரை உன் இடுப்பில் சுமந்தாய்
இத்தனையும் என்ன செய்து கடன் தீர்ப்பேனம்மா
கடவுளிடம் வரம்வாங்கி உன்னை என்
கருவில் வைத்து பெற்றெடுப்பேன்
என் மகளாக அம்மா

உங்கள் அன்பு மகன்
**பிறைன்டன் பௌழிற்சந்தரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சை நிறைக்கும் என் மம்மி

அடிமுடி தேடினாலும் அகராதியைப் புரட்டினாலும்
அம்மா எனும் சொல் எங்கிருந்து வந்தது?
ஆனால் நிச்சயமாக அன்பு எனும் சொல்
அம்மாவிடம் இருந்துதான் வந்தது

நான் கருவறையில் இருந்தபோதே
என்னை நீ காதலித்தவள் அல்லவோ மம்மி
உன்னை என் இதயவறையில் வைத்து
என் காலம் உள்ளவரைக் காதலிப்பேன் மம்மி

உன் மார்பில் நான் உறங்கையிலே
உன் இதயத்துடிப்பு என் உறக்கத்தை
கலைத்துவிடும் என்று எண்ணி
உன் இதயத்துடிப்பை நிறுத்திக் கொண்டாயோ மம்மி

மம்மி நீ தந்த சின்னச் சின்ன பரிசுகளில்
சிலிர்த்ததைவிட
அன்பையே முத்தமாய் மொத்தமாய்த் தந்தாயே
அதில் சிலிர்த்தேனே அதை நினைக்கையில்
மெய் சிலிர்க்குதே மம்மி

எனக்கு உயிர்தந்து ஈன்றெடுக்க சுமைதாங்கி, வலிதாங்கி
பின் பாலூட்டி, சோறூட்டி, தாலாட்டி பெயர்சூட்டி
அறிவூட்டி, பூச்சூட்டி கஜனுக்குத் தாரமாக்கி
நிறைவான வாழ்வு தந்து அதை முழுமையாகப்
பார்க்காமல்
இடையில் விட்டுச் சென்றாயோ மம்மி

என்னை கருவில் சுமந்த காலம் முதல்
கல்லறை செல்லும் காலம் வரை
எனக்குத்தந்த சௌபாக்கியங்களில்
ஒரு துளியேனும் திருப்பிக் கொடுக்க முடியாத
ஓர் கடனாளியாகி விட்டேனே மம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மடியில் தலைசாய்த்து
உறங்கையிலே வருடி விடுவாயே
அப்போது ஓடிவிடுமே என் மனச் சுமைகள்
சோகங்களைக் கூட சுமைதாங்கியாகச் சுமந்தவள்
அல்லவோ நீ மம்மி

நான் பால்குடித்த மார்பில் ஈட்டியாய் 2012இல்
பாய்ந்தது புற்றுநோய்
அதை அறிந்து நடைப்பிணமாய் ஆனோம் நாம்
அப்போதும் ஆறுதல் கூறும் ஆசானாய்
நீதானே எமக்கிருந்தாய் மம்மி

அடுப்பில் சட்டி வைத்து இடுப்பில் என்னை வைத்து
சோறூட்டிய உன் இடுப்பு முள்ளந்தண்டில்
2015 இல் படர்ந்தது அந்த கொடியநோய்
அதையும் நீ காட்டிக் கொள்ளாமல்
எங்களைக் கலகலப்பாக வைத்திருந்தாயே மம்மி

பேரப்பிள்ளைகளை நேசத்துடன்
பார்த்துப் பார்த்து வளர்த்து
ஆசையுடன் பாசம் காட்டி
நல்ல நல்ல பண்புக்கதைகள் சொல்லிக் கொடுத்து
பாசமுள்ள பறவையைப்போல் அரவணைத்தாய் மம்மி

வீடு யார் வந்தபோதும் வெறும் வயிற்றுடன்
அனுப்பியதுமில்லை
நலம் விசாரிக்க வந்தவர்களை உபசரித்து நன்றி கூறத்
தவறியதுமில்லை
விரும்பி உண்ணும் கட்டச்சம்பல் பாற்சோறு
இடியப்பம் சொதி கணவனின் சகோதரிகள்
பரிமாற உண்டு மகிழ்ந்தாய்
இறுதியில் அதைக்கூட உண்ண முடியாதது கண்டு
கலங்கி நின்றோம் மம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயால் மருத்துவமனை சென்று பின் வீடு வந்தாய்
மருத்துவர்கள் கைவிட்டு நாள் குறிக்கப்பட்டவளாய்
இருப்பின், காலம் குறைய குறைய
நான் தாயாக மாறி உனை சேயாகப் பார்த்தேன்
இப்படியே இருந்துவிடுவாய் என்ற அற்ப ஆசையில்

மரணப்படுக்கையில் மணி அடித்துக் கூப்பிட்டு
கைபிடித்துத் தூங்குவாயே!
இறுதி இரு நாட்கள் நீ கூப்பிட்டு நான் விளங்கிக்
கொள்ளவில்லையே
அந்த குற்ற உணர்வு முள்ளாய் மாறி
குத்துகின்றதே மம்மி

உயிரைக் கொல்லும் கொடியநோய்
தந்த இறுதி 12மணி நேரம்
சுவாசிப்பதற்கு நீபட்ட பாடு கண்டு
ஒருகணம் என் சுவாசம் நின்று மீண்டும் வந்தது
உன் சுவாசம் மட்டும் காற்றில் கலந்து சென்றது மம்மி

சிரமம் கொடுக்க மாட்டேன்
சோகம் தாங்கமாட்டாள் என எண்ணித்தான்
அண்ணாவின் கரம் பற்றி உன் இறுதிமூச்சை விட்டாயோ
மம்மி
விட்டமூச்சைத் தேடுகின்றேன் பிழையேதும் செய்தால்
உன்னிடம் மன்னிப்புக் கேட்க

ஆயிரம் ஆயிரம் உறவுகள் ஆறுதல்
சொல்ல இருந்தபோதும் அன்பை ஊட்டி அரவணைக்க
மீண்டும் கிடைக்காதா உன்மடி என்னும் சிம்மாசனம்-மம்மி

உன் அன்பான இளையமகள்
**கல்ப்பனா கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ammamma!

I don't know where to start
You showed me so much love and care
I miss your endless tight hugs
And the bedtime stories you shared
When I come home from school
You fed me with great affection.
When my mum scolds me,
You always protected me
You are the best Ammamma in the world
I miss you ever so dearly especially your beautiful smile
And numerous kisses.

-Beautiful granddaughters

**Kishona & Sashana Kajenthiran**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இளைய சகோதரி

என் இளைய சகோதரி
என் வீட்டின் கடைக்குட்டி
செல்லப்பிள்ளையாய்
சில காலம் வாழ்ந்ததும்
சீர் பொருந்தும் குடும்பவாழ்வில்
சிறந்து நீ வாழ்ந்ததும்
வாழ்ந்த வாழ்க்கைக்கு
அர்த்தமே!
என்றாலும் இங்கு
பலமுறை துடித்தது என் இதயம்
உயிர் வாழ்வதற்கு அல்ல
என்னோடு வாழ்வதற்கு
உன்னை நினைத்து நினைத்து
என் இதயம்
அழுது துடிப்பதை அறிவாயோ!
"அவனவன் தன்தன் வரிசையிலே
உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பவனானவர் கிறிஸ்து
பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள்
உயிர்ப்பிக்கப்படுவார்கள்"

கொரிந்தியர் - 15:23
அப்பொழுது நாம் மீண்டும் சகோதரராய் உன்னை சந்திப்போம்.

உன் அன்பு அக்கா
**வசந்தி குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Beloved Sister Manju

You are my baby sister  And a best friend too
So young, gentle and kind.
But you're gone before us And only God knows why

You were my chat mate When on one around
You rang me, I rang you,
At home when you're alone
We talked and talked all day long.

We trusted each other We talked our secrets.
Problems, worries and happiness.
Sometimes we gossip and tell stories
And sometimes we cried and laughed too.

I will miss you dear sister,
Especially at Christmas time,
At home when we get together,
Our lives go on without you,
But nothing is the same.

But now I will not be sad, You're going home.
Angles come to take you, To a shining path,
Into a place of Peace and Light.
You will be remembered
Not only the day you left,
In our thoughts and in our hearts,
You're with us,
Always.

**Mohan Family**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உடன் பிறப்பே! நீ எங்கு சென்றாய்

தங்கை என்று ஆசையோடு நானழைக்க
இவ்வுலகில் நீ இல்லையே!

நோயொன்று உன்னை அணுக
நொடிப்பொழுதில் மறைந்து விட்டாய்
நொந்தே போய்விட்டேன்
நினைவுகள் வாட்டுதம்மா

அன்பான உன் சிரிப்பும்
கனிவான உன் பேச்சும் - இனி
எங்கு காண்போம்...
ஆறுதில்லை என் மனம்

உன் வருத்தம் பாராது
என் நலம் கேட்பாயே – என்
பிள்ளைகளின் கல்வியில்
அக்கறை காட்டினாயே

கண்மூடும் வேளையிலும் எனை
காணத் துடித்தாயே
காலனவன் கொடுமையினால்
காணாமலே போனாயே

கண்ணீரைக் காணிக்கையாக்குகிறேன்
கவலைகள் என்றும் தீராது
கடவுளிடம் சென்றுவிட்டாய் என
தேற்றுகின்றேன் என்னை நானே

என் அன்புத் தங்கையே உன்
ஆத்மா சாந்தியடைய கடவுளிடம்
மன்றாடுகின்றேன்.

உன் அன்புச்சகோதரி
**ஆனந்தி குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *A LOVING TRIBUTE TO MRS MANJULA BENEDICTCHANDRAN*

### *"We thank the good Lord every day that we had her in her glory and beauty until her last breath"*

Manju became our adopted daughter when she married Benadict, our beloved nephew. It was God's great blessings that they both were together, happily married for over 25 years and blessed with three lovely children, Shobana, Brinden and Kalpana.

Manju was a person of happiness and laughter, always with a smiling face. We saw in her the qualities such as duty, decency, reliability, honour, dignity, respect, kindness, hospitality etc. She not only held these qualities in high esteem but also practiced them every day during her life on earth.

Before she became ill, Manju was managing the Brinden Video Shop in Hoe Street, Walthamstow while fulfilling the needs and expectations of her husband and three young children as a loving wife and a kind mother. Needless to say that Manju was very duty conscious and a disciplinarian but she could never resist the opportunity to have a laugh with friends and loved ones. She was such a lovely and joyful person and very popular amongst her colleagues and relatives.

Manju was very popular with her welcoming character and welcomed everyone with a smiling face. Anyone visiting her would not be able to leave her home without sharing a meal with her and the family. We visited her with heavy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

hearts two weeks before her final passing but even at that hour she was insisting that we share a meal with her and her family. She was such a wonderful and hospitable person.

Manju was born into a Christian family and continued to live in her faith till her last breath. It was her faith in Christ Jesus kept her alive for over five years after she became ill with this monstrous sickness.

We have lost such a lovely spiritual person for ever. It was His will that she was taken at this younger age of 47 and it's our believe that she is with Jesus our Redeemer and Saviour seeking His Blessings and praying continuously for the welfare of her husband, children, grandchildren, daughter-in-law, sons-in-law and all other relatives.

The loss of Manju is irreparable to all of us. It is very hard and difficult to accept her absence from us. We can only pray to God our Lord to give all of us, her loved ones, the strength and peace to accept the reality.

We have lost a lively, dignified Lady who brought joy and fulfilment to many and her legacy will live for ever.

Fondly remembered by

**Auntie & Uncle**
**(Mrs & Mr Sivagunam)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுநிலவே! எங்கள் மஞ்சுவே!

முழுநிலவே! எங்கள் மஞ்சுவே!
உங்கள் புன்னகையே எங்கள் ஆதாரமே
ஒடிந்ததே உங்கள் சிறகு
பிரிந்ததே எங்கள் உயிர்
விண்ணிலே நீங்கள் சந்தோஷமாய் இருக்கவே
மண்ணிலே நாங்கள் வேண்டுகிறோம் இறைவனையே
மறக்கவே முடியாது உங்கள் நினைவையே

**ரஞ்சினி குடும்பத்தினர்**

********************************

## அன்பின் திருவுருவே! அழகிய தேவதையே!

அண்ணாவை கரம் பிடித்து
அண்ணியாக மனை புகுந்தாய்
அக்கணமே எம் மனம் நுழைந்தாய்
ஆதாரமாய் எமக்கு நீ இருந்தாய்
அன்பின் திருவுருவே அழகிய தேவதையே
அழியாத புன்னகையோடு எம்மோடு நீ இருந்தாய்

பிறந்த வீட்டைவிட புகுந்த வீட்டை
மேலாக நேசித்தாயே
உன் நேசத்தின் உச்சம் கண்டு
ஊரவர்கள் வாய் பிளக்க
உறவாடி வாழ்ந்தாயே

பொன்னான வாழ்க்கை என்று நினைத்தோமோ
பொல்லாங்கு வந்து சேர்ந்ததுவே
பொறுமையோடு காத்திருந்தோமே
நீ பொறுமை இழந்தாயே
எமை விட்டுப் பிரித்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் ஒன்று ஓடியதே
உன் பிரிவால் வாடுகின்றோம்
உன் நினைவால் ஏங்குகின்றோம் - இனி
உனை எங்கு காண்போமோ
உனை நினைக்காமல் மறப்பதற்கு
நினைத்தாலும் முடியவில்லை

**மேரி மல்லிகா குடும்பத்தினர்.**

********************************

## தோழியாய், அண்ணியாய், தாயாய் எனை நிறைத்தவளே!

உண்மையான அன்பைச் சுமக்கும் இதயம் படைத்த என்
அண்ணியே! பிரிவின் வலியை நீ அறிவாயோ இல்லையோ
உன்னையே நேசித்துக் கொண்டிருக்கும் எங்கள்
எல்லோரினதும் உள்ளம் உணர்ந்து கொண்டிருக்கும்
அதன் கொடுமையை.
கொண்டு செல்ல ஒன்றும் இல்லை இவ்வுலகிற்கு
கொடுத்துச் செல்வோம் உண்மையான அன்பையும்
நட்பையும் என்பதை எங்களுக்கு காட்டிச் சென்ற என்
அண்ணியே!
மனதிற்கு பிடித்த சில உறவுகள் - அம்மாவும்
நீயும் உட்பட என்னோடு நீண்ட காலம்
நிலைத்திருக்கவில்லை. புரிந்து கொண்ட நீயுமோ
தொலைதூரம் என்னை விட்டுச் சென்று விட்டாய்
அண்ணியே!
மருத்துவர்களும் உனக்கு நாள் குறிக்க
மறக்கப்பட்ட தருணத்தில் உன்னை காலனவன் வந்த
அழைத்து விட்டான். ஆனால் சாவு ஒன்றும் புதிதல்ல.
அவரவர்களுக்கு வரும்போது தான் அந்த துன்பத்தின்
ஆழம் தெரிய வருகிறது.
என்னுடைய தோழியாக, அண்ணியாக, தாயாக உன்னை
என் மனத்தில் எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணியே நினைப்பது மட்டுமன்றி என் உணர்வுகள், மனக்கிலேசங்களையும் பகிர்ந்து கொள்வேனே என் அண்ணி என் பிள்ளைகளையும் அதிகம் நேசித்த உன்னை அவர்கள் அன்போடு பெரியமாமி என்ற உறவு முறையை மறந்ததுமில்லை அண்ணி.
எந்த விழாக்களானாலும் எனதருகில் அமர்வாயே. அந்த இருக்கை இனி வெற்றிடமாக இருக்கப் போவதை என் மனம் எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறது அண்ணி.
அண்ணி உன் அழகான புன்முறுவல் பூத்த உன் வதனத்தை எப்போது காண்போமோ அண்ணி.
அண்ணாவைத் தனியாகத் தவிக்க விட்டு நீ விண்ணகம் சென்றது இளைப்பாறுதல் பெறுவதற்கா அண்ணி.
உன் பிள்ளைகள் மூவரில் ஒருவரிடமாவது ஒரு குழந்தையாக உருப்பெற மாட்டியோ அண்ணி.
பிறப்பின் துவக்கம் கருவறை தோன்றி மண்ணறை வரையில் மரணத்தை நோக்கியே நம் எல்லோரினதும் பயணம் செல்கிறது. ஆனால் அதில் நீ மட்டும் முந்திக் கொண்டு சென்று விட்டாய்.
இனி மேல் எப்போது உன்னைக் காண்போம். எப்போது உன்னோடு கதைப்போம் என்றிருக்கிறது அண்ணி.
உன் ஆத்மா சாந்தி அடைய வேண்டும்.

உன் அன்பான மைத்துனி
**டொறிற்றா குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையை நினைக்க வைக்கும் அண்ணி

உங்கள் இல்லம் வரும்போதெல்லாம் முகமனுடன் உபசரித்து, நல்விருந்தோம்பி என் மனையாளையும், என் அன்புச்செல்வங்களையும் அரவணைத்து கதைகள் பல பேசிய அண்ணியே உங்கள் பிரிவு எம்மால் தாங்க முடியாதது. நிரப்ப முடியாத இடத்தை விட்டுச்சென்றுள்ளீர். புலம்பெயர்ந்த வாழ்வில் அன்புக்காக ஏங்கி நிற்கின்ற வேளையில், வெயிலில் கிடைக்கும் பெருநிழலாக உங்கள் அன்பு எங்களுக்குக் கிடைத்தது. உங்கள் விருந்தோம்பல் நற்பண்பு என்றென்றும் போற்றுதற்குரியது.

உங்கள் ஒவ்வொரு செயலும் இன்றும் நினைக்க நினைக்க உங்கள் பிரிவின் வேதனை புலப்படுகின்றது. அண்ணியாக இல்லாது அனைத்துத் துன்பங்களையும் பகிரக்கூடிய ஓர் தாயாக சகோதரியாக எம் வாழ்வில் திகழ்ந்தீர்கள். உங்கள் நல்ல பண்புகளை உங்கள் மக்கட்செல்வங்களிடம் விட்டுச் சென்றுள்ளீர்கள். அவர்களது நற்பண்புகள் உங்களை மீண்டும் மீண்டும் நினைக்கத்தூண்டுகின்றது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் பிரிய மைத்துனர்
**தேவச்சந்திரன் குடும்பம்**

********************************





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Periya Maami!

There's  a special angel in heaven
It's you. Our Periya Maami!
It is not where we wanted you
but where God wanted you to be.
You touched the heart of many
like only an Angel can do

If roses grow in heaven, Lord please picks a bunch for her
Place them in her arms and tell her they're from us
There's an ache within our heart
That will never go away
Death leaves a heartache that no one can heal
Love leaves memories that no one can steal

**Suganya, Deenoja & Jeromi**

********************************





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மாமன் தாரமே!

## தவிக்கின்றோம் உம்பிரிவால்

நான் பிறக்கும் முன்பே என் உறவானவர் நீங்கள்
நான் பிறந்த பின்பு தூக்கி வளர்த்தவர் நீங்கள்
உணவு ஊட்டி உங்கள் பிள்ளைகளோடு சீராட்டி
வளர்த்தவர் நீங்கள் உறங்க வைக்க தாலாட்டுப்பாடி
வளர்த்தவர் நீங்கள்.

எங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தவர் நீங்கள்.
எங்களோடு சேர்ந்து கதை பேசிச் சிரித்தவர் நீங்கள்
எனக்கும் உணவு பரிமாறி என் நண்பர்களையும்
உபசரித்தவர் நீங்கள்.

தாய்வழிச் சொந்தத்தை தழைக்க வைத்தவர் நீங்கள்
தாய்மாமன் தாரமான உங்களை தவற விட்டு
தவிக்கின்றோமே நாங்கள் இன்று.

அன்பு மருமகன்

**திஷோக்**

## You will always be Number 1!

Talking with you,
Is always a treat, You're one, Special Periyamaami,
Who no one can beat;
Your kindness and love Can't be over looked,
You will always be Number 1 to me,
We've shared many good times.
Our whole life through And it's really a pleasure
Having a periyamaami like you.

**Loving niece**

**Joy & Jacky**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பிற்குரிய சகோதரி மஞ்சு அக்கா!

பள்ளிப் பருவத்தில் புள்ளி மானாய்
துள்ளித் திரிந்த அழகு கண்டோம்
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
வெள்ளை மனப் பண்பு கண்டேன்

சோதரியின் மைத்துனியின் நண்பியாகி
ஆதரவாய் எந்தனுடன் அறிமுகமாகி நின்றாய்
மஞ்சு நீ!
மிதியுந்தில் உலாப்போகும் அழகு கண்டேன்
பேரழகி டயானாவின் சிகையழகை
ஆவலுடன் கோதிநிற்கும் மிகையழகை
உளமார உனில்கண்டேன் உவகைகொண்டேன்

மைத்துனரின் காதலியாய் எம் குடும்பமதில்
நீயிணைவாய் என்று நான்அன்றறியேன்

கிறிஸ்துவுக்காய் இளைஞர் சங்கமதின்
அரும்புக்குழு சிறார்களுக்காய் கழகமதை
உன்தாய்வீட்டில் இயங்கிய நாள்முதலாய்
வாரமொரு சனியுந்தன் வண்ணமுகம் கண்டேன்

உனையீன்ற பெற்றோரின் உள்ளமதைக் கண்டு
எனை வரவேற்று உபசரிக்கும் பண்புகண்டு
எனை மறந்தேன் உளம் குளிர்ந்தேன்

காதல்மணாளனுடன் இணைவதற்காய் சீமைக்கு
முச்செல்வங்களை அரவணைத்து வந்ததனை
உளமாரக் கண்டேன் உன்நட்பைத் தொடர்ந்தேன்

பொல்லாத புற்றுநோய் பொன்னுடலைத் தாக்கிடினும்
அள்ளக்குறையாத புன்னகையை உதிர்த்துநின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல்போல் வாரிஅணைத்தெம்மை வரவேற்று
விருந்தோம்பல் சிறப்பதன் வரைவிலக்கண மாகிநின்றாய்

கர்த்தர்மேல் அளவிலாக் காதலதன் மகிமைதனால்
அர்த்தமுள்ள வாழ்வதற்கு கர்த்தாவாய் நீயிருந்தாய்
எம்மில்ல விழாக்களிலும் ஆலயத்தின் நிகழ்வுகளில்
உன்கைவண்ணத்தில் உருவான புறுட்சலட் தனிச்சுவையே

பெண்கள் நாம் கூடுகின்ற இடங்களெல்லாம் - உந்தன்
காலிஇருக்கையது நெஞ்சத்தை நெகிழவைக்கும்
கிறிஸ்துஅரசர் ஆலயமும் உந்தன் சேவையதை
இழந்ததனால் துயருற்று உளம்சோர்ந்து நின்றதம்மா

நித்தமுனைக் காதலிக்கும் நிறைவான கணவருக்கும்
முத்தான மூன்றுஉந்தன் மக்கட் செல்வர்க்கும்
எத்தனையோ தியாகங்கள் அன்பொடு நீபுரிந்தாய்
அவர் குழந்தைகட்கும் தாயாகி தனித்தொண்டாற்றினாய்

அன்புளமும் பாசமும் அனைவரையும் அணைக்கின்ற
பண்புளமும் பரிவும் பகட்டில்லாப் புன்னகையும்
தன்னகத்தே கொண்ட தூயவளே! சோதரியே!
என்னவளே! என்ஆருயிர்ச்சகோதரியே! மஞ்சுவே!

கர்த்தருக்குப் பணிபுரிய கடுகியே சென்றனையோ
அர்த்தமுள்ள வாழ்வுதந்த உத்தமியே! மஞ்சு!
சென்றுவா எம்காலம் கனிந்ததும் சந்திப்போம்
அன்றுவரை உன்நினைவால் நாம்வாழ்வோம்

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**கசில்டா குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரராகிய திரு பௌடிற்சந்திரனின் குலவிளக்கு**
**திருமதி மஞ்சுளா பௌடிற்சந்திரனுக்கு எமது கவிதாஞ்சலி**

சொல்ல இனி வார்த்தை இல்லை தொண்டை வரண்டு போனதம்மா
வண்ணமயில் மஞ்சுளாவை தென்றல் கொண்டு போனதம்மா
தேடி அலைந்தும் தேவதை உன்னை தேட முடியவில்லை
தேன்மொழியே! என் தேன் நிலவே!

தேம்பி அழுகின்றோம் நாம் இங்கே

உன் கனிஅமுத இதழோரம் கனிந்து வரும் சிரிப்பெங்கே
கள்ளமில்லா புன்சிரிப்பில் கலந்துவரும் ஓசை எங்கே
கண்ணெதிரே வந்துநிற்கும் கலகலப்பான உன் வார்த்தை எங்கே
பெண்மானே பெருந்தகையே பௌடிற்றின் பேரின்பக் காதலியே
பேசாமல் உன்மூச்சு ஓய்ந்ததென்ன பெருமகளே
கண்ணிமைப்பொழுதினிலே காலனவன் கணக்கிடவே
கடுகதிப்பயணமதில் கண்மூடி நித்திரையாய்
விண்மீன்கள் உனையழைக்க விரைந்துநீ சென்றாயோ

பௌடிற்றின் வாழ்க்கையை பேரின்ப நதியாய் ஓடவிட்டாய்
பெரு வாழ்வுதனை இன்பமாய் செழிக்க விட்டாய்
மக்கள் மூன்றினை மகிழ்வோடு பெற்றெடுத்தாய்
அவர்களிற்கு மருமக்கள் முத்தாக தெரிந்தெடுத்தாய்

உன் ஆசைமக்கள் மருமக்களை அன்போடு அரவணைத்தாய்
பேர் சொல்ல பேத்திமாரை துணையாக வைத்திருந்தாய்

உன் பெயரை ஓயாமல் தினம் சொல்ல
பிறைன்டனிற்கு மஞ்சுளாவாய் மகள் வடிவம் கொடுத்தாய்

வீட்டிற்கு வந்தவரை இன்முகம் காட்டி வரவேற்று
விருந்தோம்பல் செய்து மகிழ்ந்தாய்

இப்படியாய் இன்ப வாழ்க்கையை இனிதே களித்தவேளை
எங்கிருந்து காலன் வந்தான்

காலனவன் குறிபார்த்து கவர்ந்து விட்டான் மஞ்சுளாவை
ஒளிவீசும் உன் கணவன் ஒளிவீச மறுத்தாரம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது மூத்தமகள் சோபனா கதறி அழுகின்றாளம்மா
அவள் கணவன் பாலாவோ பதறி நிற்கின்றாரம்மா

உன் ஆசைமகன் பிறைன்டனோ அழுது புலம்புகின்றாரம்மா
அவன்மனைவி இவான்ஞ்சலினோ ஏக்கமுற்று வாடுகின்றாளம்மா

கடைக்குட்டி கல்ப்பனாவோ ஏங்கி அழுகின்றாளம்மா
அவள் கணவன் கஜனோ களைஇழந்து போனாரம்மா

மஞ்சுளா உம் பிரிவால் என் கண்ணீரோ வடிந்ததம்மா
என்றாலும் துடைத்து விட்டேன்

என் எழுதுகோலோ கசிந்ததம்மா எப்படி நான் அழிப்பேன்
என் இதயக் குமுறல்தனை எழுதுகோலால் வார்க்கின்றேன்

என் இனிய சகோதரியே! மஞ்சுளாவே!!
என் மனதில் பதித்தவளே!!!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**மல்லிகா குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் இலண்டன் வோல்தம்ஸ்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மஞ்சுளா பெனடிற்சந்திரன் பரலோகம் அடைந்தார். அன்னார் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியுமாவர். இவரின் இழப்பால் அங்கலாய்த்து நிற்கும் குடும்ப உறவுகளுக்கு கண்ணீர்த்துளிகளை கவிதையாய் வடிக்கிறோம்.

அன்பிற்குரிய சகோதரி மஞ்சுளா
பண்பினை உன்னில் நாம் கண்டோம்
பலரின் உள்ளங்களையும் அதனால் நீ பெற்றாய்
மலரினைப்போல் உள்ளம் கொண்டாய்
மாறாச் சிரிப்பினைப் முகத்தில் நிலையாய் வைத்தாய்
பாசத்தை கொட்டிப் பழகிய சகோதரியே
உம்மைப் பரிதவிக்க விட்டு நீயும் பரலோகம் சென்றாயோ.

உன் ஆத்ம சாந்திக்காக அனைவரும்
ஆழமாய் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
**கிறிஸ்து அரசர் ஆலய தமிழ்க்குழமம்.**

**********************************

## கண்ணீர் அஞ்சலி

மீண்டும் உங்கள் அழகிய முகம் காணத் துடிக்கின்றனர்
காணும் வழியறியாது தவிக்கின்றனர்.
உடலுக்கும் உயிருக்கும் ஒப்பந்தம் அறிந்தவன் இறைவன்
அதை மாற்றிட வழியில்லை எம்மிடம் நோயோடு போராடித் தோற்றனர். இம்மண்ணில் உம் பிள்ளைகள் உமைப்பிரிந்து தவிக்கின்றனர். விண்ணகத்தில் ஓரிடத்தில் நீர் ஆத்மசாந்தி பெற இறைவனிடத்தில் வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லூட்டன்வாழ் தமிழ் கத்தோலிக்க மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கம்**

Waltham Fotest Tamil Sangam

61 Hoe Street, Walthamstow, London E17 4SA

திருமதி மஞ்சுளா பெனடிற்சந்திரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். தமிழ்ச்சங்கத்தின் சார்பிலும், தமிழ்ப்பாடசாலையின் சார்பிலும், தமிழ்ச்சங்க மாதர் அணியின் சார்பிலும் எமது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள் கின்றோம். மஞ்சுளாவும் அவரது கணவரும், பிள்ளைகளும் எமது தமிழ்ச்சங்கத்துடன் மிக நீண்ட காலத்தொடர்பு உடையவர்கள். ஆரம்ப காலத்தில் மஞ்சுளா, அவரது மகள் சோபனாவையும் தொடர்ந்து பிறைன்டன், கல்பனா ஆகியோரையும் எமது பாடசாலைக்கு தமிழ் கற்க அழைத்து வந்தார். எமது பாடசாலையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அவரது பிள்ளைகளை ஈடுபடுத்தி அவர்களது ஆற்றலை வெளிக்கொணர்ந்தார். பேச்சுப் போட்டிகளின்போது பிள்ளை களுக்காக தானும் மனனம் செய்து அவர்களை ஊக்குவித்தார். பிள்ளைகள் தமிழில் சிறந்து விளங்குவதற்கு மஞ்சுவே காரணமாக அமைந்தார்.

அதுமட்டுமன்றி பாடசாலை விளையாட்டுப்போட்டி, கிறிஸ்மஸ் விழா, கலைவிழாக்கள் ஆகியவற்றின்போது இவரது பங்களிப்பு அளப்பரியது. பெற்றோருடனும் தமிழ்ச்சங்க அங்கத்தவருடனும் மிக அன்பாகவும் உதவிசெய்யும் மனப்பான்மையுடனும் நடந்து கொள்வார்.

எந்நேரமும் புன்சிரிப்புடன் மலர்ந்த முகத்துடன் மென்மை தவழும் பேச்சுடன் காணப்படுவார். அர்ப்பணிப்போடு இதயசுத்தியோடு அவர் செயலாற்றுவது அனைவரையும் அவர்மீது அன்பும் பெருமதிப்பும் வைக்கக் காரணமாக அமைகின்றது. அவரது நற்பழக்கங்கள் அவரது பிள்ளைச் செல்வங்களிடம் மிளிர்வது அவரை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துவதாக அமைகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பால.ரவீந்திரன்(பாலரவி)**

தலைவர், தமிழாசான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நெஞ்சம் நிறைந்த மஞ்சு!

பார்க்கும் இடமெங்கும் உந்தன் புன்னகை பரவுதடி
நீக்கமற உந்தன் செயல்கள் நினைவினைப் நிறைக்குதடி
உன்னை நினைக்கையிலே கண்ணீர் ஆறாய் பெருகுதடி
நீயில்லா நாட்களினை நினைக்க நெஞ்சு வெடிக்குதடி
வானம் இருண்டதுபோல் என்னுள் வெறுமை தோன்றுதடி
காதல்மணம் கொண்டேன் என்உள்ளம் நிறைந்திருந்தாய்
காலம் உள்ளவரை எந்தன் அருகில் நீயிருப்பாய் - என்று
நாளும் நினைத்திருந்தேன் எந்தன் நினைப்புப் பொய்த்ததடி
என்னவளே! உனைத் தேவன் அழைத்தானோ – உந்தன்
சேவை மிகக்கருதி தன்னுள் சங்கமம் ஆக்கினனோ!
வானிருந்து என்துயரை நீ காண மறந்தனையோ
வையகம் நானிருந்து உன்நினைவை மீட்டித்தொடர்வேனோ!

உன் அன்பு மணாளன்
**பௌடிற்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி சொல்லும் நேரமிது

எமது குடும்பத்தலைவி **திருமதி மஞ்சுளா பௌழற்சந்திரன்** அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்த வேளையில் தாங்கொணாத துயரத்தோடு தவித்திருந்த எங்களுக்கு,
எம்மோடு உடனிருந்து எமது துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், எம்மை உணவளித்து ஆதரவளித்தவர் களுக்கும், மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர் களுக்கும், இத்துயர்ச்செய்தியை உலகெலாம் உள்ள எம் உறவுகளுக்கு மின்னஞ்சல் வாயிலாக உடன் அறிவித்ததோடு, கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்களை வெளியிட்ட அனைத்து அன்பு உறவுகளுக்கும், அன்னாரின் திருப்பலிப்பூசையைச் சிறப்புடன் ஆற்றிய அருட்தந்தையருக்கும், அருட்சகோதரிக்கும் நல்லடக்க நிகழ்வினை செவ்வனே நடாத்த ஓடியோடி உதவி புரிந்த அன்பு உள்ளங் களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**பௌழற்சந்திரன்**
கணவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயே நிரந்தரம்

நீயே நிரந்தரம், இயேசுவே
என் வாழ்வில் நீயே நிரந்தரம்

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் - 2
நான் மாண்ட பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம், நிரந்தரம், நீயே நிரந்தரம் - 2

தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது நீயே நிரந்தரம் - 2
நிரந்தரம், நிரந்தரம் நீயே நிரந்தரம் - 2

செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலை வாழ்வு என்னும் நிஜமான நீயே நிரந்தரம்
அதன் விலையாக எனை நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம் - 2
நிரந்தரம், நிரந்தரம், நீயே நிரந்தரம் - 2

## தொடும் என் மனதினையே

தொடும் என் மனதினையே மனப்புண்கள் ஆற வேண்டுமே
இயேசுவே மனப்புண்கள் ஆற வேண்டுமே - 2

தொடும் என் உடலினையே உடல் நோய்கள் தீர வேண்டுமே
இயேசுவே உடல் நோய்கள் தீர வேண்டுமே - 2

தொடும் என் ஆன்மாவையே என் பாவம் போக்க வேண்டுமே
இயேசுவே என் பாவம் போக்க வேண்டுமே - 2

தொடும் என் இதயத்தையே உம் அன்பு பெருக வேண்டுமே
இயேசுவே உம் அன்பு பெருகிட வேண்டுமே - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JR Print, Tel : 0208 503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org